# True Credits Private Limited

true credits

# கடன் விண்ணப்பம் - விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

**ஆவண எண்: TC-LATC**

# ஆவண விவரங்கள்

| குறிப்பிட்ட விவரங்கள் | விவரங்கள் |
|---|---|
| **தலைப்பு** | **கடன் விண்ணப்பம் - விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** |
| **பதிப்பு** | 4.0 |
| **வகைபாடு** | பொதுஜனம் |
| **விவரிப்பு** | **கடன் விண்ணப்பம் - விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்** |
| **நடைமுறைத் தேதி** | **ஏப்ரல் 01, 2023** |

இந்தக் கடன் விண்ணப்ப - விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ("விதிமுறைகள் & நிபந்தனைகள்") இந்திய சட்டத்திற்கு இணக்கமாக வெளியிடப்பட்டது மற்றும் (i) இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872; (ii) தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000, தகவல் தொழில்நுட்பம் (நியாயமான பிணைய செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் முக்கியமான தனிப்பட்ட தகவல்) விதிகள், 2011, மற்றும் விதி 3 (1) இன் தகவல் தொழில்நுட்பம் (இடைத்தரகர்கள் வழிகாட்டுதல்கள்) விதிகள், 2011 ஆகியவை உட்பட அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள், ஒழுங்குமுறைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள்; மற்றும் (iii) இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட பொருந்தக்கூடிய விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் ஆகியவை உட்பட ஆனால் அவை மட்டுமே அல்லாத இந்திய சட்டத்தால் நிர்வகிக்கப்படும்.

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 மூலம் திருத்தப்பட்ட பல்வேறு சட்டங்களில் மின்னணு ஆவணங்கள் / பதிவுகள் தொடர்பான திருத்தப்பட்ட விதிகளின் கீழ் உருவாக்கப்பட்ட மின்னணு ஒப்பந்தத்தின் வடிவிலான மின்னணுப் பதிவேடு ஆகும். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆவணத்தில் நேரிலோ, மின்னணு அல்லது டிஜிட்டல் முறையிலோ கையொப்பமிடத் தேவையில்லை.

இந்த விதிமுறைகள் & நிபந்தனைகள் உங்களுக்கும், ட்ரூ கிரெடிட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும்/ அல்லது அதன் கடன் வழங்கும் கூட்டாளர்களுக்கும் (கீழே வரையறுக்கப்பட்ட விதிமுறைகள்) இடையிலான சட்டப்பூர்வமாக பிணைக்கும் ஆவணமாகும். இந்த ஆவணத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டவுடன் (மின்னணு வடிவத்தில் அல்லது மின்னணு பதிவு அல்லது பிற வழிகளில்) அது நடைமுறைக்கு வரும்.

1. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் நோக்கத்திற்காக, சூழலுக்கு ஏற்ப தேவைப்படும் இடங்களில்
    a. "நீங்கள்/உங்கள்", "வாடிக்கையாளர்" அல்லது "பயனர்" என்பது ட்ரூ கிரெடிட்ஸ் மற்றும்/ அல்லது அதன் கடன் வழங்கும் கூட்டாளர்களிடமிருந்து கடன் பெறும் நோக்கமுடைய எந்தவொரு இயற்கையான அல்லது சட்டப்பூர்வ நபரையும் குறிக்கும்.
    b. "True Balance" அல்லது "பிளாட்ஃபார்ம்" என்றால் பேலன்ஸ்ஹீரோ இந்தியா பிரைவேட் லிமிடெட் மூலம் இயக்கப்படும் டிஜிட்டல் லெண்டிங் அப்ளிகேஷன் (DLA) என்று பொருள்படும்.
    c. "ட்ரூ கிரெடிட்ஸ்" என்றால், இந்திய ரிசர்வ் வங்கியில் (RBI) முறையாக பதிவு செய்யப்பட்ட NBFC ஆன ட்ரூ கிரெடிட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்று பொருள்படும்.
    d. "கடன் வழங்குபவர்" என்பது நிலைக்கேற்ப, ட்ரூ கிரெடிட்ஸ் அல்லது அதன் கடன் வழங்கும் கூட்டாளர்களைக் குறிக்கும்.
    e. “கடன் வழங்கும் கூட்டாளர்” என்றால் வங்கிகள், வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பிளாட்ஃபார்ம் மூலம் கடன் அல்லது தொடர்புடைய நிதிசார் சேவைகளை எளிதாக்குவதற்கு ட்ரூ கிரெடிட்ஸுடன் ஒரு ஏற்பாடு செய்துள்ள இந்திய ரிசர்வ் வங்கியால் ஒழுங்குமுறைபடுத்தப்படும் பிற நிதி நிறுவனங்கள் என்று பொருள்படும்;
    f. “கடன்” என்றால் வாடிக்கையாளருடன் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் வாடிக்கையாளருக்கு ட்ரூ கிரெடிட்ஸ் மற்றும்/ அல்லது அதன் கடன் வழங்கும் கூட்டாளர்களால் வழங்கப்படும் பல்வேறு கடன் வழங்கும் திட்டங்கள்/சேவைகள் என்று பொருள்படும்.
    g. “கடன் ஆவணங்கள்” என்பது முக்கிய உண்மைத்தகவல் அறிக்கை, ஒப்புதலாணைக் கடிதம், கடன் ஒப்பந்தம்/ கடன் வழங்கல் கடிதம் (பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உட்பட) மற்றும் கடனின் தொடர்பாக நிறைவேற்றப்படும் வேறு எந்தவொரு ஆவணங்களையும் உள்ளடக்கும்.

2. இதன்மூலம் True Balance என்பது டிஜிட்டல் மூலம் கடன் வழங்கும் செயலி என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள், மேலும் கடனுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டால், கடன் அளிப்பவரால் வழங்கப்படும் என்பதை ஏற்றுக்கொள்கிறீர்கள் மற்றும் ஒப்புக்கொள்கிறீர்கள். மேலும், கடன் ஆவணங்களில் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன் தொகையிலிருந்து பொருந்தக்கூடிய செயலாக்கக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள், செலவுகள், வரிகள் போன்றவற்றைக் கழித்துக்கொள்வதற்கு கடன் வழங்குபவருக்கு நீங்கள் இதன் மூலம் அதிகாரம் வழங்குகிறீர்கள்.

3. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் கடன் வழங்குபவர் வழங்கிய கடன் ஆவணங்கள் மற்றும் தனியுரிமைக் கொள்கை போன்றவற்றிலோ அல்லது வேறு விதமாகவோ கூறப்பட்டுள்ள பொருந்தக்கூடிய அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும், நிலைக்கேற்ப, கடன் வழங்குபவரிடமிருந்து பெறப்பட்ட கடனுக்கான வாடிக்கையாளர்/கடன் பெறுபவராக உங்கள் உரிமைகள் மற்றும் கடமைபொறுப்புகளை நிர்வகிக்கும்.

4. True Balance மூலம் கடனைப் பெறுவதும் அணுகுவதும், இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்வதன் பேரிலும், எல்லா நேரங்களிலும் இணங்குவதற்கும் நிபந்தனைக்குட்பட்டது.

5. இந்தியக் குடிமகனாகவும் மற்றும் இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872-ன் கீழ் சட்டப்பூர்வமாக பிணைக்கப்பட்ட ஒப்பந்தங்களில் நுழைவதற்குத் தகுதியுள்ளவர்கள் மட்டுமே கடனைப் பெற முடியும் என்பதை நீங்கள் புரிந்துகொண்டு ஒப்புக்கொள்கிறீர்கள். ஒப்பந்தச் சட்டம், 1872-ன் கீழ், மைனர்கள், விடுவிக்கப்பெறாத நொடிப்பு நிலையர்கள், முதலியோர் உட்பட, ஒப்பந்தம் செய்துகொள்ளத் தகுதியில்லாத எந்தவொரு நபரும் கடனைப் பெறத் தகுதியற்றவராவார்.

6. பதிவு செய்தபின் மற்றும் கடன் பெறும் நேரத்திலும் மற்ற எல்லா நேரங்களிலும் எங்களுக்கு நீங்கள் வழங்கும் பெயர், முகவரி, தொடர்பு எண், வங்கிக் கணக்குத் தகவல்கள், நிதிசார் / பரிவர்த்தனை சார் விவரங்கள் போன்ற உங்களுடைய தகவல்கள் (“பயனர் தகவல்”) உண்மையாக, துல்லியமான, தற்போதைய மற்றும் முழுமையானதாக இருக்கும். என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள். பயனர் தகவல்களைப் பராமரிக்கவும் புதுப்பிக்கவும் மற்றும் பயனர் தகவல்களை உண்மையானதாகவும் துல்லியமானதாகவும் முழுமையானதாகவும் வைத்திருக்க ஒப்புக்கொள்கிறீர்கள்.

7. True Balance உடன் பகிரப்பட்ட உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் கடன் விண்ணப்ப மதிப்பீடு மற்றும் பிற தொடர்புடைய நோக்கங்களுக்காக கடனுக்கு விண்ணப்பிக்கும் போது, கடன் வழங்குபவருடன் பகிரப்படும் என்பதை இதன் மூலம் ஏற்றுக்கொள்கிறீர்கள் மற்றும் ஒப்புக்கொள்கிறீர்கள்.

8. நீங்கள் வாலெட் மூலம் திருப்பிச் செலுத்தத் தேர்வுசெய்யும்பட்சத்தில், உங்களுடைய True Balance வாலெட் கணக்கிலிருந்தும், ட்ரூ கிரெடிட்ஸ் வழங்கிய கட்டண அட்டவணையின்படியும் கடனின் பொருந்தக்கூடிய தவணை(கள்) டெபிட் செய்யப்படலாம் என்பதை இதன் மூலம் அங்கீகரிக்கிறீர்கள்.

9. ட்ரூ கிரெடிட்ஸ் அல்லது True Balance மூலம் வழங்கப்படும் பல்வேறு கடன் ஆஃபர்கள் அல்லது விளம்பர செயல்திட்டங்களை அவ்வப்போது தொலைபேசி அழைப்புகள், SMS, வாட்ஸ்ஆப், எலக்ட்ரானிக் மெயில்கள் அல்லது வேறு ஏதேனும் தொடர்பு முறைகள் மூலம் பெறுவதற்கு நீங்கள் இதன் மூலம் ஒப்புதல் அளிக்கிறீர்கள். மேலும் ட்ரூ கிரெடிட்ஸ் அல்லது True Balance மற்றும்/ அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி/சேவை வழங்குநர்கள் உங்கள் கடன்/கடன் பயணம், அக்கவுண்ட் செயல்பாடு, கடன்/கடன் பயணம் தொடர்பான நினைவூட்டல் அல்லது பின்னூட்டகருத்துக்கள் அல்லது கடன்/கடன் பயணம் தொடர்பான எந்தவொரு விஷயம் குறித்த நிலையை அனுப்பும் அல்லது விவாதிக்கும் நோக்கத்திற்காக உங்களை தொலைபேசி அழைப்புகள், SMS, வாட்ஸ்ஆப், எலக்ட்ரானிக் மெயில்கள் மூலமாகவோ அல்லது கிடைக்கக்கூடிய வேறு ஏதேனும் தகவல்தொடர்பு முறை மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம் மற்றும் அத்தகைய தொலைபேசி அழைப்புகள், SMS போன்றவை “தொந்தரவு செய்ய வேண்டாம்” என்ற இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் (TRAI) கொள்கையின் கீழ் வராது என்று நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். இந்த நோக்கத்திற்காக, திங்கள் முதல் ஞாயிறு வரை 09.00 மணி முதல் 21.00 மணி வரை எப்போது வேண்டுமானாலும் உங்களைத் தொடர்பு கொள்ள ட்ரூ கிரெடிட்ஸ் அல்லது True Balance மற்றும்/ அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி/ சேவை வழங்குநர்களுக்கு நீங்கள் இதன் மூலம் அனுமதி வழங்குகிறீர்கள்.

10. கடனைப் பெற, KYC விதிமுறைகளை நிறைவேற்றுவது மற்றும் கடன் வழங்குபவர்களிடம் தேவையான தகவல்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும். நீங்கள் உங்கள் KYC-ஐ ட்ரூ பேலன்ஸுடன் சமர்ப்பித்துள்ள பட்சத்தில், கடன் மற்றும் தொடர்புடைய சேவைகளைப் பெறுவதற்கு உங்கள் KYC கடன் வழங்குபவருடன் பகிரப்படலாம் என்பதை இதன்மூலம் ஏற்கிறீர்கள் மற்றும் ஒப்புக்கொள்கிறீர்கள்.

11. உங்கள் கடன் பணியக பதிவுகளை அணுகுவதற்கும், கடன் வழங்குபவருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடன் விண்ணப்பம் தொடர்பான உங்கள் கடன் தகுதிநிலையை மதிப்பிடுவதற்கு அதைப் பயன்படுத்துவதற்கும் மற்றும் தேவைப்படும் போது, கடன் பணியகங்களுக்கு தேவையான அறிக்கையை அனுப்பவும் கடன் வழங்குபவருக்கு உங்கள் வெளிப்படையான ஒப்புதலை வழங்குகிறீர்கள். உங்கள் கடன் தகுதிநிலையை அவ்வப்போது மதிப்பிடும் நோக்கத்திற்காக, கடன் தகவல் நிறுவனங்களிடமிருந்து (CICs) அடுத்தடுத்த அறிக்கைகளைப் பெறவும்/சுருக்கக் குறிப்பெடுக்கவும் நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள் மற்றும் கடன் வழங்குபவரைஅங்கீகரிக்கிறீர்கள்.

12. கடனுக்கான உங்களது விண்ணப்பம், கடனுக்கான ஒப்புதல் அல்லது வழங்குதலுக்கான உத்தரவாதம் அல்ல என்பதை நீங்கள் புரிந்துகொண்டு ஒப்புக்கொள்கிறீர்கள், அத்துடன் இது கடன் வழங்குபவரின் தனித்த விருப்பத்திற்கு மட்டுமே உட்பட்டது.

13. உங்களின் அனைத்து அல்லது எந்தவொரு தகவல்களையும் ஏதேனும் சட்டப்பூர்வ/ ஒழுங்குமுறை அதிகாரிகளுடன், தகுந்தபடி மற்றும் / அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்களுடன் அவ்வப்போது கடன் மற்றும் தொடர்புடைய சேவைகளுக்காகப் பகிர்ந்துகொள்ள கடன் வழங்குபவருக்கு நீங்கள் அங்கீகாரம் வழங்குகிறீர்கள்.

14. கடன் பயணத்தில், நீங்கள் வங்கிக் கணக்கு ஸ்டேட்மெண்ட்டைப் பெறும் கூட்டாளருக்குத் திருப்பி விடப்படலாம் என்பதையும், உங்கள் கணக்கு ஸ்டேட்மெண்ட் கடன் விண்ணப்பத்தை மதிப்பிடுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதையும் நீங்கள் இதன் மூலம் புரிந்துகொண்டு ஒப்புக்கொள்கிறீர்கள்.

15. கடன் வழங்குபவர் அறிவுறுத்தியபடி, சேகரிப்புக் கணக்கிற்கு கடன் வழங்குபவரின் பேரிலான e-NACH / பிற ஆணையை வழங்க ஒப்புக்கொள்கிறீர்கள். கடன் வழங்குபவருக்கு எழுத்துப்பூர்வமாக 30 நாட்களுக்கு முன்னறிவிப்பில்லாமல் உங்கள் வங்கிக் கணக்கை மூடவோ அல்லது கடன் நிலுவையில் இருக்கும் போது e-NACH / இதர ஆணையை திரும்பப் பெறவோ கூடாது, மற்றும் அத்தகைய வங்கிக் கணக்கு மூடப்பட்டால், கடன் வழங்குபவர் வழிகாட்டியபடி நீங்கள் e-NACH/ பிற ஆணையை பொருத்தமாக மாற்ற வேண்டும். e-NACH ஆணையை அங்கீகரிக்கப்படாமல் திரும்பப் பெறுவது, பணம் செலுத்துதல் மற்றும் தீர்வு அமைப்புச் சட்டம் 2007 இன் பிரிவு 25ஐ மீறுவதாகும் மற்றும் சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டதாகும் என்பதை நினைவில் கொள்ளவும்.

16. நீங்கள் கடன் சேவைகளைப் பயன்படுத்துவது பொருந்தக்கூடிய சட்டம் அல்லது ஒழுங்குமுறைகளை மீறாது என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள், பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்கள் மற்றும் உத்தரவாதம் அளிக்கிறீர்கள். நீங்கள் கடன் சேவைகளைப் பயன்படுத்துவது சட்டப்பூர்வ நோக்கங்களுக்காக மட்டுமே என்பதையும், கடன் வழங்குபவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு நடவடிக்கையும் எதிர்கொள்ளப்படாது என்பதையும் நீங்கள் இதன் மூலம் புரிந்துகொள்கிறீர்கள். கடன் ஆவணங்களிலிருந்து எந்த உள்ளடக்கத்தையும் நீக்குவது அல்லது மாற்றுவது; கடன் அல்லது கடன் வழங்குபவர்களுக்கு எதிராக ஏதேனும் தவறான அல்லது தீங்கிழைக்கும் கூற்றுக்களை உருவாக்குதல்; மற்றும் ஸ்பேமிங் மற்றும் ஃபிஷிங் உட்பட எந்தவொரு சமூக விரோத, சீர்குலைக்கும் அல்லது அழிவுகரமான செயல்களிலும் ஈடுபடுதல் ஆகியவை உங்களுக்கு வெளிப்படையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். சேவைகளைப் பயன்படுத்துவதால் அல்லது தவறாகப் பயன்படுத்துவதால் எழும் எந்தவொரு உரிமைகோரல்கள், சேதங்கள், தகராறுகளுக்கு கடன் வழங்குபவர் பொறுப்பாக மாட்டார் அல்லது/மற்றும் கடன்பொறுப்பேற்க மாட்டார்.

17. பொருத்தமானது மற்றும் சரியானது என்று கருதும் எந்த நேரத்திலும், முன்கூட்டியே அறிவிப்பை வழங்குவதற்கான எந்தக் கடமைபொறுப்பும் இல்லாமல், இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றங்கள் மற்றும் திருத்தங்களைச் செய்வதற்கு, கடன் வழங்குபவருக்கு முழுமையான உரிமை உள்ளது. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் புதுப்பிக்கப்பட்ட பதிப்பிற்கு எங்கள் இணையதளம்/ஆப்-ஐ நீங்கள் பார்வையிடலாம். உங்கள் கடனின் தொடர்ச்சியானது, புதுப்பிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படும் அத்தகைய மாற்றங்கள் மற்றும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதைக் குறிக்கிறது.

18. பொருந்தக்கூடிய சட்டத்தின்படி, கடன் வழங்குபவரால் வழங்கப்படும் கடன் தொடர்பான ஏதேனும் கவலை அல்லது மனக்குறைகள் இருந்தால், நீங்கள் https://www.truecredits.in/partner இல் கடன் வழங்குபவரின் தொடர்புடைய குறைதீர்ப்பு அதிகாரியைத் தொடர்பு கொள்ளலாம்.

19. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் இருந்து எழும் எந்தவொரு தகராறும், அல்லது உங்களுக்கும் கடன் வழங்குபவருக்கும் இடையிலான எந்தவொரு தகராறும் இந்திய சட்டங்களுக்கு ஏற்ப பொருள்கொள்ளப்படும் மற்றும் நிர்வகிக்கப்படும். மேலே உள்ளவற்றிலிருந்து எழும் எந்தவொரு சட்ட நடவடிக்கையோ அல்லது நடைமுறையோ இந்தியாவின் ஹரியானா, குருகிராமில் அதிகார வரம்பைக் கொண்ட தகுதிவாய்ந்த நீதிமன்றங்களில் பிரத்தியேகமாக கொண்டு வரப்படலாம் என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள்.